இலங்கை பொலிசாருக்கு ஆலோசனை கூற

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

யாழ்ப்பாணம், எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 307
தேசிய தினசரி

கீலக கார்த்திகை 29 தமிழாண்டு 23 சனிக்கிழமை (14-12-68)

பிரி. நிபுணர் விஜயம்

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

இலங்கையில் குற்றத் தடுப்புகள் பற்றி ஆராயவும் பொலிசாருக்கு ஆலோசனைகள் கூறவும் ஒரு பிரிட்டிஷ் நிபுணர் இன்று காலையில் இலங்கை வந்து சேர்ந்தார். இரு. [illegible] என்ற இந்த பிரிட்டிஷ் நிபுணர் ஆறு மாதங்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

ஐ. ஜி. பி. கவலை

குற்றச் செயல்கள் நாட்டில் இப்போது அதிகரித்து விட்டதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அபயகுணவர்த்தனா கவலை தெரிவித்துள்ளார்.

இன்ஸ்பெக்டர் ஜெனரல் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விதகுற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு நவீன போக்குவரத்தும் ஒரு காரணம் எனத் தெரிவித்துள்ள அவர் குற்றச்செயல்களைக் குறைப்பதற்கு பொது மக்கள் பொலிசாருக்கு ஆதரவளித்து ஒத்துழைப்புதர வேண்டுமெனக் கேட்டுள்ளார். இது ஒரு அவசிய தேவையென அவர் எடுத்

[3-ம் பக்கம் பார்க்க]

அயூப் ஆட்சியை எதிர்த்து கி. பாகிஸ்தானில் குழப்பம்

பல இடங்களில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்

லாகூர், டிச. 13

கிழக்குப் பாகிஸ்தானில் இன்று பல இடங்களில் குழப்பம் ஏற்பட்டது. பொலிசார் சுட்டதில் ஏராளமானவர்கள் காயமடைந்தார்கள்.

ஜனாதிபதி அயூப்கானின் ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் ஆரம்பித்த ஹர்த்தாலைத் தொடர்ந்து இக்குழப்பம் நடைபெற்றது.

டாக்காவில் ஹர்த்தால்காரர்கள் கலவரத்தில் இறங்கியபோது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் 12 பேர் காயமடைந்தனர். இன்னோரிடத்தில் ஏற்பட்ட கலவரத்தை அடக்கப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 9 பேர் காயமடைந்தனர். வேறு பல இடங்களிலும் துப்பாக்கிப்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. ஓரிடத்தில் கோபம்கொண்ட ஜனக்கூட்டமொன்று அரசாங்கத்துக்குச் சொந்தமான 12 வாகனங்களை அடித்து நொருக்கியது.

எதிர்க்கட்சியினர் கலகமுறைகளைத் தூண்டிவிடுவதாக ஜனாதிபதி அயூப்கான் கண்டித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானிலும் டாக்காவிலும் ஆயுததாரிகளான பொலிசார் ரோந்து சுற்றுகின்றனர்.

வேலை தேடித் திரியும் வாலிபருக்கு எச்சரிக்கை

கொழும்பு வெள்ளி

வேலை தேடித் திரியும் வாலிபர்களை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பம்பலப்பிட்டியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து, பணம் பறித்து வேலை தருவதாகக் கூறி ஏமாற்றுபவர்கள் பற்றிய விபரங்களைத் தருமாறு வாலிபர்களைப் பொலிசார் கேட்டுள்ளனர்.

பத்திரிகையில் விளம்பரம் போட்டு, பிணைப்பணம் வாங்கியதாகக் கூறப்படும் இரு தமிழர்களை பம்பலப்பிட்டிப் பொலிசார் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

இம்மாதம் 7-ம் திகதிப் பத்திரிகையில் வந்த விளம்பரம் ஒன்றைத் தொடர்ந்து இரு பிணைப்பணம் கட்டிய வாலிபர் ஒருவர் 9-ம் திகதி பொலிஸாருக்குச் செய்த புகார் ஒன்றிலேயே சம்பந்தப்பட்ட இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களது அலுவலகத்தை முற்றுகையிட்ட பொலிசார் அதற்குள்ளிருந்து விண்ணப்பப்பத்திரங்கள் உட்பட பல முக்கிய தஸ்தாவேஜுக்களை கைப்பற்றியுள்ளனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

அமெரிக்க விமானம் எரிந்து வீழ்ந்தது

நியூயோர்க், டிச. 13

இருபது பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற அமெரிக்க விமானமொன்று வெனிசுவேலாவுக்கு அருகில் எரிந்து வீழ்ந்ததாகத் தெரிகிறது. உறங்குவதற்குச் சற்று நேரத்துக்கு முன்பே இந்த விபத்து நிகழ்ந்ததாம். மீட்புக் கப்பல்கள் அந்த இடத்துக்கு விரைந்து கொண்டிருக்கின்றன. இதுவரை சுமார் ஏழு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் செய்திகள் கூறுகின்றன.

பரீட்சைக்குத் தோற்றுமலே விலகவேண்டுமா?

மாணவர்களை எதிர்நோக்கும் பிரச்னை

யாழ்ப்பாணம், சனி

ஜி. சி. ஈ. சாதாரண வகுப்பில் இவ்வருடத்துடன் இரண்டு ஆண்டு படிப்பை முடிக்கும் மாணவர்கள் அடுத்த வருடம் பெரியதொரு பிரச்னை எதிர்நோக்கியுள்ளது.

நேற்று ஆரம்பமாக இருந்த ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சையை பரீட்சைப் பகுதியினர் ரத்துச் செய்ததே இதற்குக் காரணமாகும். இப்பிரச்னைக்கான பதிலை கல்லூரி ஆசிரியர்களும் அதிபர்களும் கூடச் சரியாகக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை.

மாணவன் ஒருவன் கல்லூரியில் ஜி.சி.ஈ. சாதாரண வகுப்பில் இரண்டாண்டு வருடம் மட்டும் படிக்க முடியும். அதன் பின்னர் கல்லூரியை விட்டு விலகவேண்டுமென்பதே கல்விப் பகுதியின் நடைமுறைச் சட்டமாகும். இவ்வருடம் ஜி.சி.ஈ. சாதாரண வகுப்பில் இரண்டாம் வருட படிப்பை முடிக்கும் மாணவர்கள் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டதால் பரீட்சைக்குத் தோற்றாமலே கல்லூரியைவிட்டு விலகவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளனர்.

சில கல்லூரி அதிபர்கள் இந்த மாணவர்களை அடுத்த வருடம் கல்லூரிக்கு வரவேண்டாமெனவே சொல்லி விட்டார்களாம். வேறு சில கல்லூரிகளில் பரீட்சை நடக்கும் வரை விசேஷ வகுப்பு இந்த மாணவர்களுக்கு ஒழுங்கு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

[8-ம் பக்கம் பார்க்க]

பல்கலைக் கழகத்தில் மீண்டும்

இந்து கலாசார போதனை

பண்டிதர் இரத்தினம் விடுக்கும் வேண்டுகோள்

பேராதனை வெள்ளி

'இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கலாசாரத்தை மாணவர்கள் கற்கும் வாய்ப்பினைப் பெறுவதற்கு வசதிகளைச் செய்யப் பல்கலைக்கழக மாணவரும் ஆகியோரும் ஒத்துழைக்க வேண்டும்' என்று இலங்கை பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் கண்டியில் சைவ மகாசபையினர் சென்ற புதன்கிழமை நடாத்திய நாவலர் விழாவில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

கலாநிதி க. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

'நாவலர் அவர்களின் மரபினை வளர்ப்பது பற்றி நினைவுகூரும் இந்நாளில் இலங்கைப் பல்கலைக்கழக முருகன் கோவிலுக்குச்சென்றேன். அவ்வாலயம் அமைப்பினையும் அதன் வழிபாட்டுக்குரிய வாய்ப்பினையும் உதவும் மாணவர் இயக்கத்தினையும் பாராட்டுகின்றேன். அம்மாணவர்களின் [illegible] ஓரளவு அறிந்திருந்தேன்

[8-ம் பக்கம் பார்க்க]

வேலைநிறுத்தத்தின் விளைவு

பென்ஷனும், சம்பளமும் இம்மாதம் தாமதமாகும்?

கொழும்பு வெள்ளி

வேலைநிறுத்தம் செய்யாது கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கும் இம்மாதச் சம்பளம் பட்டுவாடாச் செய்வதில் தடை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதுமட்டுமன்றி இம்மாதம் பென்ஷன் பணம் வழங்குவதும் காலதாமதமாகலாம்.

திறைசேரி பணிமனைகளை முன் விட்டு இம்மாதம் 10-ம் திகதியே அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோதும் திறைசேரியில் 60 வீதமான அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. [illegible] பணப்பட்டிகைகள் இன்னும் தயாரிக்கப்படவில்லையெனவும் ஆனாலும் வேலைசெய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஓர் அதிகாரி தெரிவித்தார்.

எனினும் கல்வி இலாகா ஊழியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை சம்பளத்தின் முற்பணமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிகின்றது.

வரி விளம்பரம்

தேவை

மாணவர் இல்லத்தை மேற்பார்வையிடுவதற்கு 45 வயதுக்கு முற் பிள்ளை தொண்டு மனப்பான்மையுள்ள ஓய்வு பெற்றவர்களும் சாதி நூற்றாண்டு விரா பணிகளுக்கு அனுப்புச் சம்பளமின்றி தொண்டு செய்யக்கூடிய படித்த இளைஞர்களும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். செயலாளர் நிர்வாகி, சாந்திநிலையம், உருத்திரபுரம். 885

ஓர் கிளப்புக்கு பார் போய் (Bar Boy) தேவை. விண்ணப்பதாரர் பார் சம்பந்தமான பயிற்சியுள்ளவராக வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். சம்பளம் தகுதி அனுபவத்தைப் பொறுத்தது. 19-12-68-க்கிடையில் முகாமைத் தொடர்பு கொள்க. இராஜ நிலையம், 826/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.. 897

பண்டகசாலைக்கு விற்பனையாளர் ஒருவர் தேவை. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர் விரும்பத்தக்கது. வயது 18க்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். சம்பளம் ரூ 75 — 100 / 10 X ரூ 30/- பிணை ரொக்கம் ரூபா 500/- ஆதனப்பிணை ரூ 1000/-. விண்ணப்பங்கள் 31-12-68 முன் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும். தலைவர், [illegible] ஐக்கிய பண்டகசாலை, [illegible]. 396

தேவை

அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி செய்வதில் இலங்கை, உலோக வேலை அனுபவம் உள்ளவரும், தொழிற்சாலை நிர்வாகத் திறமையுடையவரும் ஆங்கிலம் தமிழ் அறிவுள்ள 30—50 வயதுக்குட்பட்ட முகாமையாளர் ஒருவர் தேவை.

சம்பளத் திட்டம்: 200/- — 450/- / 10X10+15X10

ரொக்கப்பிணை ரூ 2000/- ஆதனப்பிணை ரூ. 5000/- செலுத்தவேண்டும். வரிச் சார்த்த காலம் 6 மாதங்கள்.

விண்ணப்பிப்பவர்கள் தலைவர், [illegible] உலோக வேலைக் கூட்டுறவுச் சங்கம், 48, மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 25-12-68-க்கு முன் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும். 1105

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-00, 6-00, 10-00
10 கட்டளைகள்
THE TEN COMMANDMENTS
பாடசாலைகளுக்கான விசேஷ சலுகைகள்.

4-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
காதல் பறவை

தேவை

உதவி மனேஜர்

தராதரம்: எஸ். எஸ். ஸி. கூட்டுறவுப் பயிற்சியுடன்.

பிணை ரொக்கம் ரூபா 1000-00, ஆதனம் ரூபா 3000-00.

சம்பளம்: ரூபா. 125/- சகல படிகளும் உட்பட.

வயது: 25—35 வரை. நல்ல நடத்தைச்சிறப்புடையவராயிருத்தல்வேண்டும்.

முடிவு திகதி: 10-1-69க்கு முன்னர்.

விண்ணப்பம் தலைவர், அக்கராயன்குளம் பலநோக்கு கூட்டுறவு சங்கம், கிளிநொச்சி என்ற விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

வே. சுவாமிநாதன்
770 தலைவர்.

தோமையார் விழா

பண்டத்தரிப்பு, வெள்ளி
மாதகல் புனித தோமையாரின் வருடாந்த உற்சவத் திருவிழா நவநாட்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 21-ந் திகதி திருநாள் பூசையுடனும் திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடனும் உற்சவம் முடிவுறும்.

தொண்டர் படை

கோப்பாய், வெள்ளி
கோண்டாவில் கிராமத்தில் நிகழும் குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கமாக கிராமசேவகர் திரு. கே. [illegible] தலைமையில் தொண்டர்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பலப்பிட்டி தேர்தல் பிரசாரம் தீவிரம்

பலப்பிட்டிய, வெள்ளி
பலப்பிட்டிய இடைத் தேர்தலுக்கான பிரசார வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் கட்சித்தலைவர்களும் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை காலை பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவும், எதிர்க்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் தங்கள் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பகுதிகளில் நடைபெற்ற ஐக்கியதேசிய கட்சியின் பல கூட்டங்களில் கலந்து கொண்டு திரு. டட்லி சேனநாயக்கா பேசினார். இங்குறவ எல்லும் இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவர் பேசுகையில் தேசிய அரசாங்கம் நாட்டைப் பொறுப்பேற்றபோது நாட்டின் நிதி நிலைமை மோசமாயிருந்ததென்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு நாங்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்ததென்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:— தேசிய அரசாங்கம் படிப்படியாக பலவருடங்களாகத் தீர்க்கப்படாமலிருந்த பல தேசிய பிரச்னைகளைத் தீர்க்கக் கூடியதாயிருந்தது. இப்போது நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்கி நாட்டின் சுயதேவைகளையும் பூர்த்தி செய்யும் தருவாயில் உள்ளோம்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, திரு ஜெமினி ஜெயசூரியா, கல்வி உதவி மந்திரி, நீதிமந்திரி திரு. ஏ. எவ். விஜயமான்னே செனட்டர் [illegible] காணிநீர்ப்பாசன மின்சார மந்திரி திரு ஸி. பி. டி. ஸில்வா ஆகியோரும் பிரதமருடன் பலப்பிட்டியாவுக்குச் சென்றிருந்தனர்.

சுதந்திரக் கட்சி சார்பில் திருமதி ஸ்ரீமாவோ, திரு. பி.டி. டபிள்யூ டி. ஸில்வா, டாக்டர் என். எம். பெரேரா திரு. சரத்முத்தெட்டுவேகம, எஸ் ஸி. டி., ஸில்வா. திரு. பெனட் சொய்சா ஆகியோரும் [illegible] எல்லும் இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

எதிர்க்கட்சி தலைவி ஒருகூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனநாயக நாட்டில் பிரதமரில்லாத வேளையில் மக்கள் பிரதிநிதிகள் சபை முதல்வர் அரசாங்கத்தின் தலைவராகக் கடமையாற்றலாம். ஆனால் சபை முதல்வர் திரு.ஸி பி. டி. ஸில்வா பிரதமர் இல்லாத வேளையிலும் கூட அரசாங்கத்தின் தலைவராயிருக்க முடியவில்லை. இதனால்.

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 2-30, 6-30, 9-30க்கும் மூன்று காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி - பத்மினி - விஜயா
நடித்த
சரஸ்வதிசபதம்
(ஈஸ்மன் கலர்)

கிங்ஸ்லி விலாஸா மைலன்
வெலிங்டன் விஜயா
மற்றும் சினிமாஸ் திரைகளில்



சிவாஜிகணேஷன் ★ தேவிகா
ராஜ்ஸ்ரீ நாகேஷ் சகஸ்ரநாமம்
நடித்த
நீலவானம்

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - பானுமதி
நடித்த
அறிவாளி
(புதிய கொப்பி)

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு, போயா 2-30
ஜெய்சங்கர் - விஜயகுமாரி
நடித்த
பவானி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
சிவாஜி - பத்மினி
கே. ஆர். விஜயா
நடித்த
இரு மலர்கள்

260 தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் கிடைத்தது

20,000 பேருக்கு தொழில் வசதி

பம்பலப்பிட்டி வெள்ளி
260 உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு கைத்தொழில் மீன்பிடி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 112 உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

1962—63-ல் 10 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரமும் இவற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளபோதும் இவற்றிற்கு அந்நியச் செலவாணி இன்னும் வழங்கப்படவில்லை. இது வழங்கப்பட்டதும் இத் தொழிற்சாலைகள் இயங்கத் தொடங்கும்.

முதல் தடவையாக பட்டர் மற்றும் பாற்கட்டி ஆகியவை பெருந்தொகையாக உற்பத்தி செய்யப்படவிருக்கின்றன. இதற்கான அங்கீகாரம் 'சிலோன் மில்க்பூட் லிமிட்டெட், ஸிலோன் கோல்ட் ஸ்டோர் லிமிட்டெட், செபாலி இண்டஸ்றீஸ்' ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய கைத்தொழில் தொழிற்சாலைகளில் நேரடியாக 15,000 தொடக்கம் 20,000 தொழிலாளர்கள் நியமிக்கப் படுவார்களென்றும் நாளடைவில் றப்பர் மரம் போன்றவற்றையும் பயன்படுத்த இந் நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுமென்றும் தெரியவருகிறது.

சுமார் 25 தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றிற்கும்

(4ம் பக்கம் பார்க்க)

பதிவு செய்துவிட்டீர்களா?

ஈழநாடு தினக்குறிப்பு 1969

'ஈழநாடு' தினக்குறிப்பு அழகான முறையில் பலவித தகவல்களுடன் தயாராகிக்கொண்டிருக்கிறது.

இலங்கையைப் பற்றி எந்த விதமான தகவல்களையும் நீங்கள் சுலபமாக அறிந்துகொள்ள 'ஈழநாடு' தினக்குறிப்பொன்றை உங்களுடன் தவறாது வைத்துக்கொள்ள வேண்டும்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் கொடுக்கப்படும்.

[illegible] 'ஈழநாடு' பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்க

வியட்நாம் போரில் 30,000 அமெரிக்கர் மாண்டனர்

'பாரிஸ் மேசை' விவகாரத்தில் பரிசீலனை நடக்கிறது!

வாஷிங்டன், டிச. 13

வியட்நாம் போரில் இதுவரை 30,000 அமெரிக்கர்கள் மாண்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவாக நடத்த அமெரிக்கா தென்வியட்நாமுடன் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. பேச்சுவார்த்தை நடைபெறும்போது பேச்சுவார்த்தையில் கலந்துகொள்பவர்களுக்கு முன் இருக்கும் மேசை எந்த அமைப்பில் இருக்க வேண்டுமென்பது சம்பந்தப்பட்ட சாராருக்கிடையே ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை இப்போது ஓரளவு நீக்கப்படக்கூடிய உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பேச்சுவார்த்தை நடைபெறும்போது வட்டமேசை உபயோகப்படுத்தலாம் என பிரான்ஸ் தெரிவித்துள்ள யோசனையை இப்போது அமெரிக்கா, தென்வியட்நாம், வடவியட்நாம், தேசிய விடுதலை முன்னணி ஆகிய நான்கு தரப்பினரும் பரிசீலனை செய்துவருகின்றனர்.

வட்டமேசை விஷயத்தில் [illegible] மேசையில் ஓரளவு இணக்கம் ஏற்பட்டதென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்த அமைப்பிலமைந்த மேசையில் சம்பந்தப்பட்ட நான்கு தரப்பினருக்கும் ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதால் யோசனை ஏற்றுக்கொள்ளப்படலாம் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்துவதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பேச்சுவார்த்தைகள் திரு. நிக்சன் பதவியேற்புக்குப் பின்னர்தான் (ஜனவரி 20ம் திகதிக்குப் பின்னர்) நடைபெறலாமென அமெரிக்காவில் சில தரப்பினர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இதன் பின்னரே பேச்சுவார்த்தை உறுதியான அடிப்படையில் ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்படுமென இவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பாரிஸ், டிச. 13

பாரிஸ் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு இப்போது [illegible] அரசின் அதிகமான தேசிய விடுதலை முன்னணித் தூதுகோஷ்டிக்கு புதிய தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திருமதி நிகுயென் தி பின் [illegible] இப்போது திரு. திரான் பூ [illegible] தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கியிருக்கிறார். திருமதி பின் உதவித் தலைவராக இருப்பார்.

பாரிஸ் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டைகளை நீக்குவதில் இப்போது அமெரிக்க, வடவியட்நாமிய பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறார்கள்.

சைகோன் நடவடிக்கை

சைகோன், டிச. 13

தென்வியட்நாமுக்கு வியட்காங்கினர் [illegible] ஊடுருவல் செய்வதைத் தடுக்குமுகமாக இப்போது தென்வியட்நாம் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. இதனால் ஊடுருவல்காரர்களைக் கண்டுபிடிப்பது இலேசாக இருக்கும் என நம்பப்படுகிறது.

சைகோன் நகரில் கடந்த மூன்று வருடகாலத்தில் வியட்காங் கொரில்லாக்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 820 பேர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இத்தாலி பிரதமர்

ரோம், டிச. 13

திரு. மரியானோ ரூமோர் என்பவர் இத்தாலியின் புதிய பிரதமராக நேற்று பதவியேற்றார். இவர் பாடசாலை ஆசிரியராகப் பணிபுரிந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிலைமை கடினமாக இருக்கிறது?

புதுடில்லி, டிச. 13

பாரதத்துடனான பாகிஸ்தானின் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் [illegible] பாரத பிரதமர் திருமதி இந்திரா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கை நடைமுறைக்கு சாத்தியமற்றது எனவும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

மாவோவுக்கு அடுத்தவர்

பீகிங், டிச. 13

சீனக்கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. மாவோ சே துங்குக்கு அடுத்த வாரிசாக மார்ஷல் லின் பியாவோவை தேர்ந்தெடுத்துள்ளனர். இதனை மாவோ உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் குடும்பக் கட்டுப்பாடு

ஜெனிவா, டிச. 13

சுவிட்சர்லாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்க உயர்பீடம் செயற்கை குடும்பக் கட்டுப்பாட்டு முறையை அனுசரிப்பதால் [illegible] விரோதமான செயலாகக் கருதப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளது.

இவ்வித குடும்பக்கட்டுப்பாட்டுக்கெதிராக போப் [illegible] வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

கூரை பிரித்து திருட்டு

புலோலி, வெள்ளி

[illegible] நோக்கு கூட்டுறவு சங்கக் கடையின் கூரையைப் பிரித்துப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இத்திருட்டு சம்பந்தமாக [illegible] நான்கு பேரை பருத்தித்துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணை நடைபெறுகிறது.

வரவேற்பு

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை மாவட்டத்திலிருக்கும் பொதுநோக்கு கூட்டுறவு இயக்கத்திலிருக்கும் முகாமையாளர் சி. முத்துக்குமாரு ஆற்றிய சேவைகளைக் கருதி அண்மையில் நடைபெற்ற ஓர் கூட்டுறவு இயக்கத்தின் சம்மேளனத்திற்கு இலங்கையின் பிரதிநிதியாகப் பங்குபற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்பட்டதை [illegible] அவரைப் பாராட்டுமுகமாகத் திருக்கோணமலைப் பொதுமக்கள் சார்பில் நகராண்மைக் கழகத்தினரால் ஒரு பொது வரவேற்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

தற்கொலை

[illegible], வெள்ளி

[illegible] பெண் இரத்தினம் (வயது 55) நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். [illegible] விசாரணை நடத்தினார். [illegible] இவர் நீண்டகாலமாக இருதய நோயினால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப்பட்டவர் என்று விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சிறுவர் தினம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இம்மாத [illegible] திகதி [illegible] கொண்டாடப்பட இருக்கிறது.

'பாகிஸ்தான், சீனாவுடன்

அமைதியாகவே வாழ விரும்புகின்றோம்'

பாரத பாதுகாப்பு அமைச்சர்

புதுடில்லி, டிச. 13

'பாகிஸ்தான், சீனா ஆகிய அண்டைநாடுகளுடன் பாரதம் அமைதியாகவே வாழ விரும்புகிறது' என பாரத பாதுகாப்பு அமைச்சர் திரு. சுவரண்சிங் தெரிவித்துள்ளார்.

திரு. சுவரண்சிங் லோகசபையில் நடைபெற்ற விவாதத்துக்கு பதிலளித்துப் பேசுகையிலேயே இதனைக் கூறினார்.

திரு. சுவரண்சிங் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பாரதத்துக்கு எந்தவித ஆக்கிரமிப்பு நோக்கமும் கிடையாது. ஆனால் வலுக்கட்டாயமாகப் போர் ஏற்படவேண்டிய நிலை ஏற்படுமாயின் அதற்கு பாரதம் தயாராகவுள்ளது.

ஒரு தரப்பால் மட்டும் அமைதியைப் பாதுகாத்துவிட முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரது முயற்சியினாலும்தான் அமைதி பாதுகாக்கப்படலாம். ஒரு நாட்டு விவகாரங்களில் மற்ற நாடு தலையிடுவதால் குழப்பநிலை [illegible]. இதனால் [illegible] பாரதம் எச்சரிக்கையாகவே இருக்க விரும்புகிறது.

சீன துருப்புக்கள்

1962-ம் வருடமிருந்ததைப்போல் 1968-ம் வருடத்தில் பாரதம் இல்லை என்பதை நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். எனினும் மேலும் நாது கடமையை உணர்ந்து தயாராகக் கொண்டிருக்கவேண்டிய நிலையிலிருக்கின்றோம். பாரதப் பாதுகாப்பு அமைச்சராக எல்லைகளில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் சீனத் துருப்புக்கள் இப்போது குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

'நாவலரின் வசனநடையே இக்கால எழுத்து மறுமலர்ச்சி'

நாவலர் விழாவில் இரசிகமணி பேச்சு

அளவெட்டி, வெள்ளி

"செய்யுள் நடையிலிருந்த தமிழை [illegible] வசன நடைக்குக் கொண்டுவந்த பெருமை நாவலரையே சாரும்" என [illegible] நடைபெற்ற நாவலர் நினைவுவிழாவில் பேசிய இரசிகமணி கனக. செந்திநாதன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நாவலர் தம் நாட்டுக்கு மாத்திரமல்லாது தென்னிந்தியாவிலும் தமிழ்த்தொண்டாற்றி இவ்விரு நாடுகளுக்கும் ஓர் ஒளிப்பாரமாக விளங்கினார்.

இவர் சைவத்துக்கு மாத்திரம் தொண்டாற்றினார் என்று கூறுவது சரியல்ல. நாவலரின் வசனநடையே இக்கால எழுத்தாளரின் மறுமலர்ச்சியாகும்.

தற்காலத்தில் சிலர் நாவலர் தமிழ்த்தொண்டு செய்யவில்லை. சைவத்தொண்டு மட்டுமே செய்தார் என்று நூல்கள் எழுதி வருகின்றனர். இவை யாவும் பொய்.

தமது வாழ்நாளில் நாவலர் [illegible] வாழ்ந்தார். இவர் சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்திலும் பாடசாலைகளை அமைத்தார். அதன்பின்பே இலங்கையில் இந்துக்கல்லூரிகள் ஆரம்பமாகின. இதோடு அவர் ஒரு சிறந்த ஒழுக்கசீலராகவும் விளங்கினார்".

பண்டிதர் திரு. க. நாகலிங்கம் பேசுகையில், நாவலர் உயிராகிய சைவத்தையும் [illegible] உடலாகிய தமிழையும் நிலைபெறச்செய்தார் என்றார்.

திரு. ஆ. செல்வர் [illegible] பேசுகையில், நாவலர் [illegible] இம்மாபெரும் சபையில் நடத்தவேண்டும் என்றார்.

"ஒழுக்கத்தின் மூலம் இறைவனைக் காணலாம்"

பண்டத்தரிப்பு, வெள்ளி

சைவத்தையும் தமிழையும் உயிர்போல [illegible] காத்து வந்தார், நாவலர். இவரைப்போல் [illegible] இல்லை. [illegible] இருக்கின்றன. இவ்வாறு இவ்வாண்டு மெய்கண்டான் வித்தியாசாலை [illegible] அரங்கில் நடைபெற்ற நாவலர் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பண்டித [illegible] குமாரசாமிப்புலவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "கல்வி, ஒழுக்கம், தெய்வபக்தி ஆகிய இம்மூன்றும் நாவலர் இளம்பராயத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கின்றன. [illegible] ஒழுக்கம் பேணுதல் [illegible] ஒழுக்கம். இவ்வொழுக்கத்தின் மூலம் இறைவனைக் காணமுடிகிறது" என்றார்.

[illegible]

6ம் பக்கம் பார்க்க

மணிவாக்கு

தங்களை என்று ஏற்றுக்கொள்ளப் பட்டுக் கட [illegible] இலக்கியங்கள் தேசியமுற்றும் அழியா மலே இதற்குக் காரணம்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலக வருஷம் கார்த்திகை மாதம் 29 திகதி
[14-12-68]

அடிப்படை உரிமைகள்

“நமது பெரிய அண்டை நாடான இந்தியா தனது அரசியல் அமைப்பு சாஸனத்தில் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்திருக்கையில், இலங்கையிலுள்ள நாம், மற்றும் சிலருடன் இவ்விதம் செய்யத் தவறியிருக்கிறோம். அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பது கருப்புவாத சித்தாந்தத்தைப் பலப்படுத்தக்கூடுமென்ற தவறான அபிப்பிராயமே பெரும்பாலும் இதற்குக் காரணமாக இருக்கலாம்” என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ‘சன்’ என்னும் ஆங்கிலத் தினசரி தனது ஆசிரியத் தலையங்கத்தில் சரியாக எடுத்துக் கூறியிருக்கிறது. இந்தப் பத்திரிகை இப்படியொரு நல்ல தலையங்கத்தை எழுதியிருப்பதே, மனித உரிமைகள் வருடமாக இவ்வருடம் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்ற யோசனை பலனளித்திருப்பதற்குச் சான்று. பொதுவாக உரிமைகள் என்றாலே அது இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தவருக்கு மட்டுமே உரிய விஷயமென்றும் சிறுபான்மையினர் ‘உரிமைகள்’ என்ற பேச்சையே எடுப்பது பெருந்தவறென்றும் எழுதிவரும் இந்த ‘சன்’ பத்திரிகை பற்றி நாம் இதுவரை பல தடவைகளில் இப்பத்திரிகையில் கண்டித்து வந்திருக்கிறோம். இப்பொழுது நல்ல விஷயத்தை நல்ல முறையில் மனந்திறந்து எழுதியிருப்பதைக் கண்டு அதைப் பாராட்டுகிறோம். ‘அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படவேண்டுமென்று நமது தலைவர்களில் பலரும் வாதாம் பேசவுடன் நின்றுவிடுகின்றனரேதவிர வேறெதையும் செய்யவில்லை’ என்று அந்தப் பத்திரிகை தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. அடிப்படை உரிமைகள் விஷயத்தில் அந்தப் பத்திரிகையும் ஒருதலைப் பக்கத்துடன் நிற்காமல் இருப்பதோடு தொடர்ந்து இங்கு சகல மக்களும் மனித உரிமைகளுடன் வாழவும் நாட்டில் சகலரும் சமமாக வாழவும் ஒற்றுமை நிலை பெறவும் முயற்சிசெய்யுமென நம்புகிறோம்.

ஐ. நா. மனித உரிமை சாஸனத்தை நமது நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனாலும் அதை நமது அரசியல் அமைப்பில் இன்னும் சேர்த்துக்கொள்ளவில்லை. இப்பொழுதுள்ள 29-வது ஷரத்தை அரசியல் அமைப்பிலிருந்து நீக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோருவதற்கு வேறு காரணங்களிருப்பினும் ஐ. நா. மனித உரிமை சாஸன விதிகளை அரசியல் அமைப்பில் சேர்த்துக்கொள்வதில் கருத்துவேற்றுமை இருக்கமுடியாது.

கவர்னர் ஜெனரல் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறதுபோல உரிமைகளைப்பற்றிப் பேசும்பொழுது ஒருவர் தமது கடமைகளையும் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். கடமையைச்செய்யாமல் உரிமைகளைப்பற்றிப் பேசுவதில் அர்த்தமுமில்லை. இன்று முக்கியமாக இந்நாட்டிலுள்ள சகல சமூகத்தவர்களும் தலைவர்களும் இதை மறந்துவிடமுடியாது. கடமையை உணர்ந்துசெய்வதற்கு உரிமைகளே வழிகாட்டுவது முக்கியம். நமது அரசியல் சாஸனத்தில், இனியாவது மனித அடிப்படை உரிமைகள் சாஸன விதிகளைச் சேர்த்துக்கொள்ள நமது தலைவர்கள் முன்வந்து முயற்சி செய்யவேண்டும்.

இந்து கலாசாரம்

ஆண்டியிலே நாவலர்விழாவில் பேசிய இனிதொகுதி எம். பி. திரு. க. பொ. இரத்தினம் அவர்கள் மக்களின் ஈழத்தில் இந்து கலாசாரத்தைப் பேணிக்க வேண்டுமென்று அதன் செலவுக்காக திரமானிருந்தும் [illegible] ஒருவர் போட்டி முக்டுக்கட்டையால் அது நிறைவேறமுடியாமல் இருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டு இந்தக் குறையை நீக்கும் சில முயற்சியும் செய்வதாக உறுதி கூறியிருக்கின்றார். தமிழ்க் காங்கிரஸ் தலைவரான திரு ஜி. ஜி. பொன்னம்பலமும் இவ்விஷயமாக கவனம் செலுத்தி அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார். தமிழரின் இரு முக்கிய அரசியல் கட்சிகளுக்கிடையில் வேறு பல கருத்து வேறுபாடு இருப்பினும் இம்முக்கிய விஷயத்தில் இருசாரினரும் ஒருமைப்பட்டவர்களாக இருப்பது பாராட்டத்தக்கது.

இந்து முஸ்லிம் கலாசார இலாகா தொகுதி தலைவராக இருந்தவர்கள்தான், இப்போது இந்து கலாசார பகுதியையும் கவனிக்கவேண்டுமென்று முட்டுக்கட்டை போடுவதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையாயின், இவ்விஷயத்தைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி, செலேகடசபையின் மேற்குறித்த தீர்மானத்தை நிறைவேற்றி வைக்கவும் பல மாணவர்களுக்கு ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்கவும் முன்வர வேண்டும். இரு முக்கிய தமிழ்க் கட்சிகளும் தக்கபடி ஒத்துழைத்தால் இதில் வெற்றி கிடைக்காமல் போகாது.

பௌத்த கலாசாரப் போதனைக்கான செயற்பினை இலங்கைப் பீடத்தினிடம் ஒப்புவிக்காமல், பாளி மொழிப்பீடத்திடமே பல்கலைக்கழகத்தார் ஒப்புவித்த அந்த போதனை வெற்றிகரமாக நடைபெறுவதாகத் தெரிகிறது. பௌத்த சமயத்தை சிங்களவர் மட்டுமன்றி வேறு மொழி பேசுவோரும் பின்பற்றுகின்றனர். அதேபோல இந்து சமயத்தில் தமிழர் மட்டுமன்றி பல மொழி பேசுவோரும் உள்ளனர். ஆகவே இந்துமத போதனையை சம்ஸ்கிருத பீடத்தாரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற ஒரு யோசனை கூறப்பட்டுள்ளதாம். மேலும் தமிழ் பேசுபவர்கள், இந்துக்கள் மட்டுமல்லாமல் பல சமயத்தவருமுள்ளனர். ஆகவே இந்து கலாசார போதனையை தமிழ் பீடத்தாரிடம்தான் ஒப்படைக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

ஆறினஞ்சி பழகஞ்சி என்று விட்டுவிடாமல் இவ்விஷயத்தில் சிறப்பாக பார்லிமென்டிலுள்ள இந்து மெம்பர்கள் அனைவரும் இந்து சமய ஸ்தாபனங்களும் இதில் அக்கறையுள்ள பெரியார்களும் [illegible] எடுத்து இப்பொழுதுள்ள முட்டுக்கட்டையை உடன் நீக்கி கூடியசீக்கிரத்தில் இந்து கலாசார பாடத்தை போதனை பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்க எல்லா நடவடிக்கையும் எடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அசமந்தமாக இருப்பது, அவர்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறியதாகும். [illegible]

மிளகாய் உற்பத்திபற்றி யாழ். விவசாய மன்னர்

விஜயவாடா, டிச 13

விஜயவாடாவில் தங்கியிருந்த இலங்கை விவசாய மன்னர்கள் நேற்றுக்காலை புகையிரதமூலம் சாம்பூருக்குச் சென்றனர். 5 அதிகாரிகளுடன் சென்றிருந்த 26 விவசாய மன்னர்களும் நேற்று முன்தினம் குந்தூரிலுள்ள ஆராய்ச்சி ஆய்வு கூடத்தையும், அமராவதியிலுள்ள புகையிலை ஆராய்ச்சி நூதன நிலையத்தையும் பார்வையிட்டனர்.

குந்தூரில் மிளகாய் உற்பத்தியில் கையாளப்படும் முறைபற்றி யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்திருக்கும் விவசாயி திரு. நல்லதம்பி கூடிய கவனம் செலுத்தினார். மிளகாய் உற்பத்தியில் இங்கு கையாளப்படும் பயனைப்பட்ட முறைகளை பற்றி இவர் கற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாண விவசாயி இந்திய பிரஸ்ட்ரஸ்ட் நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் தாம் மிளகாய்ச் செய்கையில் கூடிய அக்கறை செலுத்துவதாகவும், ஓர் ஏக்கருக்கு 10,000 ரூபா இலாபமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அமராவதியிலுள்ள கிருஷ்ணா ஆற்றையும் பார்வையிட்ட பௌத்த விவசாய மன்னர்கள் அமரேஸ்வரர் என்னுமிடத்திலுள்ள சைவ கோயிலுக்கும் சென்றனர்.

260 தொழிற்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒவ்வொரு தொழிற்சாலையும் [illegible] ரூபாய் மூலதனம் செய்யப்படுமென்றும் 7 தொழிற்சாலைகள் வெளிநாட்டு தொழில் நுட்பங்களைப் பின்பற்றுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழில் நிலையங்கள் 3 மாத காலத்திற்குள் தங்களது நிலைமைகள் செயல்படுவதுபற்றிய அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்ட நிபந்தனைகளிலிருந்து [illegible] முறையைச் சட்டபூர்வமாக அவற்றிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்துச் செய்யப்படுமென தாம்.

“புனிதமான சேவை”

“ஆசிரியர்களின் சேவை மிகவும் புனிதமானது. ஆசிரியர்களாகிய நாம் எமது கடமையை சரியாகப் புரிந்தால் மாணவர் முன்னேற்றத்தில் ஒருகஷ்டமும் இருக்காது. அதுவும் பண்பாடும் கடமையுணர்ச்சியுமுள்ள ஆசிரியர்களின் சேவையை போற்றாமல் இருக்கமுடியாது. அப்படிப்பட்ட ஆசிரியர்களில் எமது தலைமை ஆசிரியர் திரு. க. த. ஞானப்பிரகாசம் சிறந்தவர் என்பதை எவராலும் ஒருபோதும் மறுக்கமுடியாது.”

இவ்வாறு நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கும், சேவைநலம் பாராட்டு வைபவத்திற்கும் தலைமைதாங்கிய ஆசிரியர் திரு. யோ. கொனிஸ்ரஸ் கூறினார்.

பாடசாலையில் இவ்வாண்டு பல்வேறு போட்டிகளிலும் அதிகப்படியான புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், விளையாட்டுப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கும் நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு. த. ஆம்பலம் பரிசில்களை வழங்கினார்.

மாணவர்களாலும் பழைய மாணவர்களாலும் ஒழுங்குசெய்யப்பட்ட இவ்வைபவத்தில் முக்கிய பேச்சாளராக கிராமசபைத் தலைவர் திரு. த. ஆம்பலம், திரு. இ. செல்லையா ஆசிரியர் கலந்துகொண்டு திரு. க. த. ஞானப்பிரகாசத்தின் திறமையையும் சேவையையும் பாராட்டிப் பேசினார்கள். தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்திற்கு திரு. ஞானப்பிரகாசம் நன்றி கூறினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மாரடைப்பினால் கான்ஸ்டபிள் மரணம்

நல்லூர், சனி

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. செல்லத்துரை சிவராசா என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் [வயது 30] நேற்று முன்தினம் காலை மாரடைப்பினால் காலமானார்.

அக்கரைப்பற்றிலிருந்து கொழும்புக்கு விசேஷ கடமைபற்றி சென்றிருந்த இவருக்கு நேற்று முன்தினம் காலை மாரடைப்பு ஏற்பட்டதாகவும் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று குழந்தைகளுக்குத் தந்தையான திரு. சிவராசா பொலிஸ் சேவையில் 10 வருடகாலக் கடமையாற்றினார்.

இவரது சடலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மகாத்மாவி

சாந்திவடிகள் ‘சத்திய சோதனை’ என்னும் அருமையான நூல் எழுதினார். இதற்கு ஒரு அழகான முன்னுரையும் எழுதியிருக்கிறார். அழகான மாளிகைக்கு அழகான நுழைவாயில் அமைப்பதுண்டு. கோவில் கோபுரம் இதற்கு சாட்சி. சாந்திவடிகள் சத்தியசோதனையைத் தெரிந்து கொள்ள ஏதுவாக அந்த முன்னுரையை நமக்குக் கொடுத்து உதவியிருக்கிறார். மூலவிக்கிரகத்தை தரிசிக்க விரும்புவோர் கோபுரத்தை முதலில் தரிசிக்க வேண்டும். இது போல் சத்தியசோதனை படிப்போர் எல்லோரும் தவறாது அதன் முன்னுரையைப் படிக்க வேண்டும்.

இம் முன்னுரையில் அவர் நமக்கு ஒரு முக்கியமான [illegible] திப்புகளைக் கொடுத்திருக்கிறார். அவை நமக்கு இனிமையான எச்சரிக்கைகளும் கூட. அவற்றை நாம் இங்கு பார்ப்போம்.

சுயசரிதமல்ல சத்திய தரிசனம்

‘சத்திய சோதனை’
தமது சுயசரிதம் கூற
சாந்திவடிகளின் நோ
க்கமல்ல. அவர் நடத்திய
குக்கும் சத்தியசோதனை
பலவற்றின் கதையை
நூலில் சொல்ல விரு
றார். உண்மையில் அ
டைய வாழ்க்கையில் இ
சோதனைகளைத் தவிர கு
பிடித்தக்க வேறு ஏது
இல்லாதலால் இந்நூல் அ
டைய சரிதமுமாயிற்று.

ஆகவே ‘சத்தியசோத
னை படிக்கும்போ
சாந்திவடிகளின் சத்
சாத்திரம் பாராமல் சத்
சோதனைகளைப் பா
வேண்டும். அவர் கூறியு
ஒவ்வொரு சம்பவமு
வேறு ‘சத்தியசோத
ளாக அமைந்திருப்ப
காண வேண்டும். அத
பொதிந்துள்ள சத்தி
சனத்தைக் காண வேண்
அவ்வாறு காணத் த
ருக் ‘சத்தியசோதனை’
காது. இது சாந்திவடி
கூறும் முதல் எச்சரிக்கை

— வீ.

அரசியல் அல்ல ஆன்மீகம்

‘சத்தியசோதனை’ கூ
வர்களுக்கு இன்னொரு எ
ரிக்கை. சாந்திவடிகளி
யின் ஆரம்பகால் நமது
டின் அரசியல் சுதந்
இன் தந்தை என்ற அள
மாத்திரமே அறிவோம்.
இயல் துறையிலும் அ
சத்தியசோதனை செய்
என்பது உண்மையே. ஆ
அவர் கூறுவதென்ன?
கள். ‘என்னுடைய அரசி
துறையில் நான் செய்
கும் சோதனைகளை நான்
இமயமாகவே கருதவி
அவை எனக்குத் தேடி
இருக்கும் ‘மகாத்மா’
டத்தையும் நான் க
கிக்கவில்லை... ஆன்மீகதுறை
நான் நடத்திய சோ
களைப் பற்றி சொ
திருக்கவே விரும்புகிறே
ஏனெனில் அரசியல் து
யில் வேலைசெய்வதற்க
எனக்கு இருக்கும்
சக்தியையும் நான் அ
மிருந்தே பெற்றிரு
றேன்’’ என்று கூறியுள்
ளார். ஆகவே இந்
அவர் கூறியுள்ளவை
இயல் விஷயமல்ல,
ஆன்மீகமானவை!
மார்க்கமானவை, ஆ
லுள்ள ஆன்மீக
இந்த முக்கியம் என்
நாம் புரிந்து கொள்ள
டும். இது இரண்ட
எச்சரிக்கை.

மகாத்மா அல்ல மனிதரே

முன்றாவதாக சாந்தி
ளுக்கு நாம் செய்யும்
மாபெரும் தவறை இ
குறிப்பிடவேண்டும். ச
வடிகளை தெய்வத்தின்
அவதாரம் என்றும், அமா
னமான சித்திபெற்ற
மகாத்மா என்றும் அ
தம் இணைத்திவிடுகி
த்தி ஒதுக்கிவிடுகிறோ
இதில் நமக்குள்ள ஆ
என்னவென்றால், சாந்தி
களை நாம் பின்பற்ற
கள் பின்பற்றாது சா

மஹாகணபதி மங்களமா

(தமிழாக்கம்)

வெள்ளைத் துகளும் பூநூல் மார்பினே!
மகிமை அறிவ (த) [illegible] பதீச கணேசனே!
கவியும் அறிவின் மணிபுட பூரணனே!
கலிதீர் கணேசவும் [illegible] மங்களம்.

...ாவின் ஐந்து யோசனை

...துமல்ல
...தரிசனம்

[illegible] ... 'சத்தியசோதனை' [illegible] ...

... மின்ன என்று சொல்லும்போது கூறி தம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள முடிகிறது என்பதுதான்.

இதை காந்தியடிகள் [illegible] எச்சரிக்கிறார். 'எனக்குச் சாத்தியமானது ஒரு குழந்தைக்கும் சாத்தியமானதே' என்றும் [illegible] ...

முடிவானவை அல்ல தொடருகிறவை

[illegible] ...

— வி. செல்வராஜ் —

... அல்ல ...
...மிகம்

[illegible] ...

...மா அல்ல;
...ரே

[illegible] ...

நான் எழுதப்போவதும் இந்த [illegible] "நான் செய்த சத்திய சோதனையின் கதை" என்று தலைப்புக் கொடுத்திருக்கிறேன்' என்று காந்தியடிகள் கூறுகிறார்.

இந்த அருமையான முன்னுரை [illegible] "சத்திய சோதனை" என்னும் சமுத்திரத்தில் சென்று முத்துக் குளிப்போமாக!

நன்றி: [illegible]

...ங்களமாலை
...ம்)

[illegible] ...

ஆசிரியருக்கு
ஈழநாடு
யாழ்ப்பாணம்

ஆசிரியருக்கு கடிதங்கள்

ஆசிரியர்களின் சம்பளம்

தற்போது நம் நாட்டிலுள்ள எல்லா அரசாங்க ஊழியருக்கும் சம்பளம் கூட்டப்பட வேண்டுமென்று கோரினாலும், சில பகுதியினர் அதற்காக வேலைநிறுத்தம் செய்து வருவதும் தெரிந்ததே. இச்சந்தர்ப்பத்தில் தமிழ் ஆசிரியர்களின் நிலைபற்றியும் சிந்திக்க வேண்டும்.

[illegible] நமது மொழியைப் பேணி வளர்த்தவர்கள் தமிழாசிரியர்களென்றால் அது மிகையாகாது. இப்போது நம் மொழி பல்கலைக் கழகம் வரை போதனா மொழியாக அமைந்து உரிய மதிப்பைப் பெற்ற பின்பும் [illegible] ...

[illegible] ... 1935-1967 ... 87 ... 307 ... 45 ... [illegible]

[illegible] ... உணரவேண்டும் ... ஆசிரியர்களே ... [illegible]

யாழ் நகர மேயர்

யாழ் நகர வாக்காளர்களாகிய நாம் மாநகர சபைக்கு அங்கத்தவர்களை தெரிவுசெய்து விட்டோம் என்ற எண்ணத்தோடு நின்றுவிடாமல் தெரிவு செய்யப்பட்ட 23 மாநகரசபை பிரதிநிதிகளுக்கும் ஒருவேண்டுகோள் விடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது [illegible] தெரிவு செய்யப்பட்டவர்கள் பின்வருமாறு:

1. திரு துரையப்பா அனுதாபிகள்,
2. தமிழ்க் காங்கிரசு ஆதரவாளர்களும்
3. தமிழரசுக் கட்சியும் ஆதரவாளர்களும்
4. இலங்கை சமசமாஜக் கட்சி
5. ஒன்றிலும் சேராத [illegible]

[illegible] ...

கடந்த 16 வருடங்களாக [illegible] 1969-ம் ஆண்டிலும் [illegible] 23 [illegible] ...

க. இராசரத்தினம்
யாழ்ப்பாணம்

துணை ஆயருக்கு உபசாரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மேற்றிராசன மக்கள் யாழ் மேற்றிராசனத் துணை ஆயர் வந். [illegible] ஒரு [illegible] உபசரிப்பு அளித்தனர். இவ்வைபவம் யாழ் ஆயர் இல்ல மைதானத்தில் நடைபெற்றது. வைபவத்தில் [illegible] எம். பி. திரு அழகக்கோனும் கலந்து கொண்டார்.

மாலையில் நடந்த யாழ் மேற்றிராசன [illegible] கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். திரு அழகக்கோன் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

அதிமேற்றிராணியார் எமிலியானுஸ்பிள்ளை உரையாற்றினதைத் தொடர்ந்து திரு அழகக்கோன் எம். பி. [illegible] திருவாளர்கள் எம். [illegible], ஜே. ஞானப்பிரகாசம், எஸ். ஆசீர்வாதம் முதலியோர் உப தலைவர்களாகவும் திரு எம். எம். [illegible] செயலாளராகவும் திரு பி. எம். திருச்செல்வம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். 13 பேரைக்கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

"பெற்றோர்தான் காரணம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் சனசமூக நிலையத்தில் [illegible] திரு. க. த. இராச[illegible] தலைமையில் நாவலர் விழா கொண்டாடப்பட்டது. குரு பூசையுடனும் [illegible] பிரார்த்தனையுடனும் விழா ஆரம்பமானது. நாவலர் பெருமான் போதித்தபடி [illegible] ... காரணமெனவும் [illegible] தமது உரையில் குறிப்பிட்டார்.

செல்வி [illegible], பண்டிதர் திரு[illegible] ... உரையாற்றினர்.

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

[illegible] ...

0 0 0

[illegible] ...

சு. மகாலிங்கம்
கொழும்பு

ஐயாறன் எழுதுவது

ராஜாஜி, [illegible] ...

தமிழகத்திலே [illegible] ...

0 0 0

[illegible] ...

0 0 0

[illegible] ...

[10-ம் பக்கம் பார்க்க]

"சுயநலமற்றசேவையே முன்னேற்றத்துக்குவழிவகுக்கும்"

மாதர்சங்கத்தலைவி கூறுகிறார்

நெடுந்தீவு, வெள்ளி

"ஒரு பொது ஸ்தாபனமோ சங்கமோ முன்னேற வேண்டுமானால் சுயநலமற்ற சேவையாளர்களின் சேவை மிக முக்கியமானதாகும்" இவ்வாறு நெடுந்தீவு ஜாக்குலின் மாதர் முன்னேற்றச் சங்க தலைவி திருமதி. [illegible] அந்தோனிப்பிள்ளை தமது தலைமையுரையில் கூறினார்.

நெடுந்தீவு மத்திய கிராம முன்னேற்றச் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற ஜாக்குலின் மாதர்சங்க பொதுக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசும் போது, "எமது சங்கம் மிக அண்மையில் ஆரம்பித்த போதிலும் எங்களுடைய அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும் சுயநலமற்ற சேவையுமே மிக முக்கிய காரணமாகும்" என்றார்.

நெடு மத்திய கிராம முன்னேற்றச் சங்க காரியதரிசி திரு. கோ. சௌனிஸ்லாஸ் "சங்கங்கள் உதவியின்றி இயங்கினாலும் இச்சங்கத்தின் முன்னேற்றத்தை யாவராலும் போற்றுமளவு இருக்க முடியாதென்றும் ஒற்றுமையும் ஒத்துழைப்புமே இதற்கு காரணமென்றும் கூறினார்.

சங்கம் நடாத்திய ஒரு மாதப் பயிற்சி வகுப்பில் சிறந்த முறையில் [illegible] ஆசிரியையாகப் பணியாற்ற செல்வி தோ. திரேசம்மா திருமதி. ஆ. அருணம்மா, செல்வி இ. இராசம்மா செல்வி ஊ. குணமாக்கியம் செல்வி இ. இராஜேஸ்வரி ஆகியோர் முன்வந்தனர். தங்கள் [illegible] சம்பப் பாலிப்பிற்கு உதவ தயாராகவும் முன்வந்தனர்.

நெடுந்தீவு சாயிபாபா [illegible] பேட்டிக்கு [illegible] நெடுந்தீவிற்கு [illegible] இயங்காமல் இருக்கும் [illegible] ஒன்றைப் பெற்றுத் தரும்படி கேட்டுக் கொள்ள தெரிவும் தீர்மானிக்கப் பட்டது. செல்வி இ. இராசம்மா புதிய காரியதரிசியாகவும் தெரிவு செய்யப் பட்டார்.

நெடுந்தீவு படகு சேவை

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுசேவை சீராக நடக்கின்றது. பழுதடைந்திருந்த மோட்டார் படகுகள் "அன்னைமேரியும்" "[illegible] பிறேயும்" தற்போது திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் இதுவரைக்கும் நெடுந்தீவு மக்கள் அனுபவித்து வந்த பிரயாணக் கஷ்டம் தற்போது தீர்ந்துள்ளது. நெடுந்தீவிலிருந்து காலை 8 மணிக்கு குறிகாட்டுவானுக்கும் குறிகாட்டுவானில் இருந்து காலை 9-30 மணிக்கு நெடுந்தீவிற்கும் மாலை 1 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் மாலை 3-30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவிற்கும் சேவை நடைபெறுகின்றது. இதற்கிடையில் நெடுங்காலமாக திருத்தப்படாதிருந்த இராஜேஸ்வரியும் [illegible] சேவையில் ஈடுபடுமென அறிவிக்கப்படுகிறது.

ஞாயிறின் கதிரும் நாவலரின் ஒளியும்

யாழ்ப்பாணம், சனி

'ஞாயிறு தன் கதிர்களால் உலகிலுள்ள இருளைப் போக்கி உயிர்களை வாழ செய்வதுபோல, நாவலரும் தமது அறிவு ஒளியால் சைவமும் தமிழும் மேன்மை அடையச் செய்தார்.'

இவ்வாறு திருநெல்வேலி [illegible] நடைபெற்ற ஆறுமுகநாவலர் விழாவில் பேசிய செல்வி க. தவமணி தெரிவித்தார்.

சைவமங்கையர் மாணவர் [illegible] ஆசிரியர் திரு. [illegible] தலைமையில் ஆறுமுகநாவலர் விழா நடைபெற்றது. நாவலரது திருவுருவப்படத்திற்கு பூஜை நடைபெற்றதைத் தொடர்ந்து செல்வி தவமணி சோமசுந்தரம் நாவலர் செய்த அரும்பணிகளை நினைவுகூருமுகமாக இந்த ஆண்டில் நாடெங்கும் சிறப்பான நாவலர் விழாக்களை ஒழுங்குசெய்த நாவலர் சபைக்கு தமிழ்மக்கள் என்றும் கடமைப்பட்டவர் என்றார்.

மற்றும் பலர் பேசினர். [நா. நி]

"சிலகாலமாவது பிரமசாரிகளாக வாழ்ந்து தொண்டாற்றுங்கள்"

இளைஞர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

'நாடுசெய்த தவத்தால் பிறந்த நாவலர் பெருமான் தமிழ்த்தொண்டர் மட்டுமன்றி ஒரு தேசியவீரருமாவார். அன்னாருக்கு விழா எடுப்பதை நாம் ஒரு பாக்கியமாகக் கருதவேண்டும்' என காரைநகர் [illegible] குமாரசாமி வித்தியாசாலையில் நடைபெற்ற நாவலர் விழாவில் சைவப்புலவர் வித்துவான் திரு. க. [illegible] பிள்ளை கூறினார். காரைநகர் இந்துவாலிபர் [illegible] சமுதாயத்தின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் [illegible] தலைமை [illegible] இக்கால இளைஞர்கள் நாவலரைப் போல காலமுழுவதும் பிரமச்சாரியாக இருந்து தமிழுக்குத் தொண்டாற்றாவிட்டாலும் ஒருசிலகாலமாவது பிரமச்சாரியாக இருந்து தொண்டாற்றும்படி கேட்டுக் கொண்டார். விழா [illegible] தலைமையில் நடைபெற்றது.

காரைநகர் [illegible] சங்கத்தினர், பொதுமக்களுக்கு நாவலர் படங்களை இலவசமாக வழங்கினர். காரைநகர் இந்து [illegible] நாவலர் அறிவுரை எனும் பிரசுரத்தை இலவசமாக வழங்கியது. விழாவில் காரைநகர் முருகன் குமாரசாமி வித்தியாசாலை மாணவர்களின் மார்க்கண்டேயர் நாடகமும், இவர்களின் குழுவினரின் பக்திப்பாடல்களும் இடம்பெற்றன. ச. ச. நிலையச் செயலாளர் திரு. பொ. [illegible] சேவையைப் பாராட்டி பொதுமக்களால் விழாவில் [illegible] வழங்கப்பட்டது. [நே. நி]

—

ஊர்காவற்றுறை தேர்தல்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறைப் பட்டின சபைத் தேர்தல் இம்மாதம் 17-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 14—12—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

844 மீ அலை 61 மீ

மாலை 6-30 நாதாஞ்சலி, 6-35 [illegible] நற்சிந்தனை, 6-40 [illegible], 6-45 [illegible] பாடல்கள், 7-30 [illegible], 8-00 இசை வேளை, 8-15 இன்னிசை நேரம்.

844 மீ அலை 49 மீ

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

844 மீ அலை 61 மீ

மாலை 5-00 பிற்பகல் [illegible], 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பஜனை, 7-00 கிராம சஞ்சிகை, 7-30 [illegible], 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 [illegible], 10-00 தேசீயகீதம்.

—

ஒழுக்கத்தின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] இலக்கியச் சைவப்புலவர் சங்க சார்பில் நடைபெற்ற இவ்விழாவின் ஆரம்பத்தில் நாவலர் திருவுருவம் இளவாலை நாவலர் [illegible] யிலிருந்து சித்திரமேழி [illegible] ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

தெல்லிப்பழை கிராமசபைத் தலைவர் திரு. ம. சிதம்பரநாதன் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தினார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் வித்துவான் சைவப்புலவர் செல்லையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. கே.பி. ஹரன், திரு. சொர்ணலிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. வி. செல்லத்துரை ஆகியோரும் பேசினர். இசைப் பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

—

நாவலர் தோன்றிய நோக்கம்

கோப்பாய், வெள்ளி

'ஆத்மீக உணர்ச்சியும், இறைவழிபாடும் இல்லாத [illegible] மக்கள் மத்தியிலே குறைந்தும், அருகியும் போகின்றன. இதிலிருந்து சமய மக்களையும் [illegible] சமய உணர்ச்சி [illegible] நாவலர் பெருமான் தோன்றினர். அவரது போதனைகளின் மூலமாக தமிழ்மக்களின் சமயம், கலை, கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவை பாதுகாக்கப்படலாம்' என இருபாலை [illegible] நடாத்தப்பட்ட நாவலர் விழாவில் கலந்து கொண்ட [illegible] இராமநாதன் [illegible] திரு. மி. பரமானந்தராசா கூறினார்.

இவ்விழாவை யொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் பின்வருவோர் வெற்றியீட்டினர்.

கீழ்ப்பிரிவு: செல்வன் எஸ். ரமேசன், வே. இராஜமோகன், செல்வி வே. [illegible] ராணி

மத்தியபிரிவு: கே. இருதயதேவி, வி. விஜயலட்சுமி, ஆர். ஜெகதீஸ்வரி

மேற்பிரிவு: செல்வி கே. [illegible]

பொன்னையா உபாத்தியாயர்

யாழ்ப்பாணத்துக் கொக்குவில் பொன்னையா உபாத்தியாயர் தமிழ்மொழி தென்மொழி இரண்டிலும் [illegible] கற்றவர். [illegible] மேதை விஞ்ஞான [illegible] ஆங்கிலம், [illegible] மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர் கலைநிதி பட்டம் பெற்றவர். இந்தசமயம் [illegible] இவ்வளவு துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களைக் காண்பது அரிது. அத்தகைய பொன்னையா உபாத்தியாயரிடம் [illegible] எள்ளளவேனும் இடம்பெறாத பண்புகளும், [illegible] இலக்கணங்களும், பொதுமக்களின் பெருங் குணங்களும் [illegible] அறிவு வளர்த்தலே சாலச் சிறந்த தருமம் என்று அன்னார் அடிக்கடி கூறுவது வழக்கம்.

பொன்னையா உபாத்தியாயர் இளமை தொடக்கமே ஞான சாதனையில் ஈடுபட்டவர். [illegible] தீட்சை பெற்றவர். கொழும்புத்துறை யோகசுவாமிகளைத் தமது ஞான குருவாகக் கொண்டவர். இதனை அவர் எழுதிய "சைவ சித்தாந்த ஞான விளக்கம்" என்னும் நூலின் குருவணக்கச் செய்யுளால் அறியலாம். அச் செய்யுள் பின் வருமாறு:—

சும்மாவிரு வென்னு மொரு சொல்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] செழிக்கும் கொழும்
புத்துறை நன்மெய்
[illegible]
யோக சுவாமி
போற்றி போற்றி

[illegible] எல்லாம் இன்றி [illegible] சாதனையில் நிலைபெற்றவர் பொன்னையா உபாத்தியாயர்.

யோகசுவாமிகளின் [illegible] சுவாமிகளின் பற்றற்ற தன்மையினைத் தெளிவாக்கிக் கொண்டார். உயர்ந்த ஞான நூல்களைக் கற்பிக்கும் காலத்து யோக சுவாமிகள் பற்றற்ற தன்மையின் [illegible] செய்த அரும்பெரும் சாதனைகளையும் தமது இளமைக்காலத்து இரவு 8 மணிவரை சுவாமிகளுடன் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் இருவரும் [illegible] இருக்கும்போது நிகழும் அற்புதச் சம்பவங்களையும் உதாரணங்களாக எடுத்துக் கூறுவது வழக்கம். பொன்னையா உபாத்தியாயர் ஓர் [illegible]. அவர்களது இல்லற வாழ்க்கை, உத்தியோகம் என்பன ஞான சாதனைக்குத் தடையாக இருக்கவில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு உத்தியோகம் வகிக்கச் சென்றபோது "பொன்னையா நீ எங்கிருந்தாலும் [illegible]" என்ற சுவாமிகளின் திருவாக்கு இதனை வலியுறுத்துகிறது.

கற்றலும், கற்றவை சிந்தித்தலும், அவற்றை அனுட்டித்தலுமாகக் காலம் முழுவதும் [illegible] உபநிடதங்களும் [illegible] நூல்களை நன்கு கற்றுணர்ந்து தெளிந்தவர். [illegible] பிரம சூத்திரம், [illegible] என்னும் உயர்ந்த நூல்களை கற்றலும், கற்றவைச் சிந்தித்தலும், தம்மை அடைந்தவர்க்கு அவற்றைக் கற்பித்தலுமே அவர்களது பொழுது போக்கு. [illegible] வாழ்ந்து உயர்ந்த அநுபூதிமானாக விளங்கினார். [illegible] உயர்ந்த ஞான [illegible] "சைவ சித்தாந்த ஞான விளக்கம்" என்னும் நூலாகும்.

[illegible] நிலவுவதாக.

—ஓர் அன்பன்

உருளைக் கிழங்கு

கோப்பாய், வெள்ளி

கோண்டாவில் விவசாயிகளுக்கு கோண்டாவில் [illegible] தோட்டக் கூட்டுறவுச் சங்கம் மூலம் ஒவ்வொருவருக்கும் [illegible] விதை உருளைக்கிழங்கு [illegible] ஒழுங்குகள் நடைபெறுகின்றன. மேற்படி சங்கத்துக்கு இதுவரை 1017 அந்தர் விதை உருளைக்கிழங்கு கிடைத்துள்ளதாம்.

இன்றைய பலன்

சனிக்கிழமை

14-12-68

கார்த்திகை 29உ

திதி- நவமி பகல் 12-24 மேல் தசமி.

நட்சத்திரம் - அத்தம் இரவு 11-42 மேல் சித்திரை.

ராகுகாலம் - 9-21—10 51

சுபநேரம் - 3-21—4-51

இன்று பிறந்தவர்களுக்கு— மனப்போராட்டங்கள் நிறைந்த ஆண்டாகும். சிலருக்கு அதிக கோபம் ஏற்படலாம். எதையும் ஆய்ந்து இதமாகவும் மிகவும் பொறுமையாக நடந்து கொள்ளவேண்டும். ஆண்டின் பிற்பகுதி அதிர்ஷ்டமான பலன்களைக் குறிப்பிடுகின்றன. நீண்ட நாள் பகை நீங்குவதற்கும் இடமுண்டு. மக்களின் செல்வாக்கு மகிழ்ச்சியைத் தரலாம். [illegible] வாழ்க்கையில் [illegible] கடந்த பிரயாணத்துக்கும் இடமுண்டு. வெளியூர் தொடர்புகள் உங்களுக்குப் புதிய உற்சாகத்தை அளிக்கும்.

மேஷம்- [illegible]

ரிஷபம்- [illegible]

மிதுனம் - கவனப் பார்வை, காத்திருக்கும் பகை.

கடகம்- [illegible]

சிம்மம் - [illegible] சிறப்பு, பரம் பொருள் [illegible]

கன்னி - வியாபார விருத்தி, திடீர் இலாபம்.

துலாம் - விரத்தியில், [illegible] நினைப்பு.

விருச்சிகம் - அதிக பணி வேண்டாம், பிணி வரும் கவனம்.

தனுசு - [illegible], [illegible] புகழ் உண்டு.

மகரம் - [illegible] கெடும், துன்பம் அகலும்.

கும்பம் - தாய்வழிப் பெருமை, நாகரீக வாழ்வு.

மீனம் - இனிமைய உரைத்தல், இன்ப மகிழ்ச்சி.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

செய்திச் சுருக்கம்

சதுப்புநில ஆராய்ச்சி

சர்வதேச அபிவிருத்தி சங்கக் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. சதுப்பு நிலங்களை மீட்பதில் இலங்கை எவ்வளவு தூரம் முன்னேற்றம் [illegible] கண்டறிவதற்காக இக்குழு இங்கு வந்துள்ளது.

0 0 0

யு.என்.பி.-7 ஸ்ரீலங்கா 5

ஹாமல்க்கல கிராம சபைத் தேர்தலில் யு.என்.பி. 7 ஸ்தானங்களையும் சுதந்திரக்கட்சி 5 ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளது.

0 0 0

வி.ஸி.தலைவருக்கு கூடுதல்பணம்

வருமானமாகச் சேகரிக்கப்படும் பணத்தில் 25 ரூபாவை மட்டுமே கிராமசபைத் தலைவர்கள் தமது கையிருப்பில் வைத்திருக்க இதுவரை அனுமதிக்கப்பட்டனர். இப்பணத்தில் 10 ரூபாவை மட்டும் அவசரதேவைகளுக்கும் பாவிக்க உத்தரவிடப்பட்டிருந்தது. அண்மையில் மொனராகல மாவட்டத்துக்கு சுற்றுப்பயணம் செய்த [illegible] அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவைப் பேட்டிகண்ட அதே கிராம சபைத் தலைவர்கள் இப்பணம் போதாதென முறையிட்டனர். இவர்களின் முறையீட்டைத் தொடர்ந்து கிராமசபைத் தலைவர்கள் 100 ரூபா ரொக்கப் பணம் வைத்திருக்கலாமென்றும், 25 ரூபாவை அவசர தேவைகளுக்குச் செலவிடப்படலாமென்றும் கூறினார்.

0 0 0

புதிய மா ஆலை

பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்றுமாலை 4 மணிக்கு [illegible] மா அரைக்கும் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். கொழும்பு துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த பிரமாண்டமான தொழிற்சாலை இனி நாட்டுக்குத் தேவையான கோதுமை மா முழுவதையும் அரைத்து விநியோகிக்கும்.

தொழுநோய்

பேராதனை [illegible] கட்டப்படும் புதிய பல்கலைக்கழக [illegible] இன்னும் பூர்த்தியடையாவிட்டாலும், [illegible] முடிந்த [illegible] ஏற்பாடுகள் [illegible] செய்யப்படுகின்றன.

0 0 0

பஸ்ஸொன்றுக்குள் சிசுவின் சடலம்

இ.போ.ச. பஸ்ஸில் சிசுவின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாரஹென்பிட்டியாவிலிருந்து கோட்டைக்கு வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றில் பச்சிளம் சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு கோட்டைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

0 0 0

2ல் பரீட்சை

ஜி.சி.ஈ. உயர்தர விஞ்ஞானப் பரீட்சை இம்மாதம் 28ந் திகதி நடைபெறும். இப்பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் இவ்வாரம் அனுப்பி வைக்கப்படும். 9,700 பேர் இப்பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

0 0 0

யு.என்.பி.யில் சேருவார்

மூதூர் முதலாவது எம்.பி. ஜனாப் முகம்மதலி ஐ.தே.கட்சியில் சேருவார். அடுத்த பொதுத்தேர்தலில் யு.என்.பி. சார்பில் மூதூர் தொகுதியில் இவர் போட்டியிடுவார்.

0 0 0

தொடர்ந்து வேலைநிறுத்தம்

கோரிக்கைகள் கிடைக்கும் வரை தொடர்ந்து வேலைநிறுத்தத்தை நடாத்துவதென தொழிற்சங்கங்கள் முடிவுசெய்துள்ளன. மூன்று இடதுசாரித் தொழிற்சங்கங்களும் தொடர்ந்து வேலைநிறுத்தத்தை நடத்துவதென முடிவுசெய்திருப்பதுடன், தற்போதைய வேலைநிறுத்தத்தைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஆராய்ந்தனர்.

ஜனநாயக வளர்ச்சிக்கு மனித சுதந்திரம்

பம்பலப்பிட்டி, வெள்ளி. "மனித சுதந்திரமும் பொருளாதார வளர்ச்சியும் பெற்றுள்ள ஒரு நாடுதான் ஜனநாயக ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ள ஒரு நாடாகப் பரிணமிக்க முடியும்" இவ்வாறு மனித உரிமைகள் தினத்தை யொட்டி கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:- "மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டுதான் அரசியல் கட்சிகளின் கொள்கைகளும், நடைமுறைகளும் இருக்க வேண்டுமே தவிர அவை மனித சமுதாயத்தின் உரிமைகளை நசுக்குவதாக இருக்கக் கூடாது. தனது நாட்டில் தனிமனித சுதந்திரம் அப்படித்தான் நசுக்கப்படுகின்றது. அப்படி நசுக்கப்படுகின்ற ஒரு சமுதாயம் என்றாவது ஒரு நாள் பொங்கி எழுகின்ற போதுதான் புரட்சிகள் வெடிக்கின்றன. உலக நாடுகள் பல இதற்குச் சிறந்த உதாரணங்களாக இருக்கின்றன.

"எனவே இன மதபேதங்களை மறந்த தேசிய ஒற்றுமையுடன் நாம் ஒருமைப்பாட்டுக்காகவும், மனித முன்னேற்றத்திற்காகவும் உழைக்க இந்த மனித உரிமைகள் தினம் ஒரு திருப்பு முனையாக அமையட்டும்"

நீதியமைச்சர் திரு. விஜயமானே, வித்தியோதய பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி வல்பொலராகுல, திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரும் தொடர்ந்து உரையாற்றினர்.

கூட்டுறவுக் கமிஷன் முதல் விசாரணை

பம்பலப்பிட்டி, வெள்ளி. கூட்டுறவுக் கமிஷன் தனது முதலாவது விசாரணையை ஜனவரி மூன்றாம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கின்றது. இது முடிவடைந்ததும் காலியில் விசாரணையை நடாத்தும்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தில் என்னென்ன மாற்றங்கள் [illegible] வேண்டுமென்பதை [illegible] ஆராய்வதற்காக கூட்டுறவுக் கமிஷன் அண்மையில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டது. பொதுஜனங்களிடமிருந்து கமிஷனுக்கு இதுவரை [illegible] செய்வது [illegible] து.

உதைபந்தாட்டம்

வெற்றி தோல்வியில்லை

நல்லூர், வெள்ளி. அராலி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்துக்கும் சுழிபுரம் சுடிக் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் நேற்றுமாலை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

ஆட்ட ஆரம்பத்தில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் மிகத் திறமையாக விளையாடி இடைவேளைக்கு முன்னரே இரண்டு கோல்களை விளாசி விளையாட்டு ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. இடைவேளைக்குப் பின்னர் சுடிக் ஸ்ரார்ஸ் விட்டுக்கொடுக்காமல் விளையாடி 3 கோல்களை உதைத் தள்ளியது. ஆட்ட இறுதியில் ஸ்ரீமுருகன் கோஷ்டியினர் ஒரு கோலைப்போட்டு போட்டியை சமமாக்கினார்கள்.

ஆட்டம் முடிய 5 நிமிடங்கள் இருக்கும்போது இருகழகங்களும் தங்கள் திறமையைக் காட்டி வெற்றிபெற ஒருகோலை விளாச மிகவும் கஷ்டப்பட்டபோதிலும் இருபகுதியினரும் முடியாமல் போகவே ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி சுழிபுரம் விக்டோரியா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் வலி மேற்கு [illegible] பிரிவினால் நடாத்தப்பட்டது.

'ஒழுக்கமுள்ளவர்களாக உயர கல்வி உதவவேண்டும்'

ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர் அறிவுரை

நல்லூர், வியாழன். நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாலையில் இரண்டாண்டு காலப் பயிற்சிபெற்று வெளியேறும் 45 ஆசிரியர்களுக்கும் கலாசாலை அதிபர் திரு. ஜெ.ஜீ. அசரத்தினம் பிரியாவிடை விருந்தளித்துப் பேசும்போது, ஆசிரியர்களாக வெளியேறுவோர் கலாசாலையில் பயிற்சிபெற்றவற்றை மாணவர்களுக்குப் பயன்படுத்தவேண்டுமென்றும் மாணவர்களை ஒழுக்கமுள்ளவராக உருவாக்கி வளர்ப்பதற்கு ஏற்ற கல்வியை அளிப்பதே தங்களது கடமையாக இருக்கவேண்டுமென்றும், கலாசாலையின் நற்பெயரைக் காப்பாற்றிச் செல்லுமிடங்களில் சிறப்புற வாழவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அதிபரின் பிரியாவிடை விருந்திற்கு நன்றி தெரிவித்துப் பேசிய திரு. த. சிவ [illegible] இன்று ஆசிரியர்கள் தமது இடமாற்றம் பற்றியும் சம்பள உயர்வு பற்றியும் சிந்திக்கவேண்டியவர்களாயிருக்கிறார்களென்றும். இவை சம்பாதிக்கப்பட்ட பின்பே மாணவர் கல்வியின் அடிப்படைத் தேவைகளைப் பற்றிச் சிந்திக்கச் செயலாற்ற முடியுமென்றும், கல்வியின் குறைபாடுகளை திருத்த முன்வரும்போது, மாணவர் ஒழுக்கமானவராயும், பண்புள்ளவராயும் விளங்குவரென்றும் [illegible] ஆசிரியர்கள் சேர்ந்தோர் இடமாற்றம் பெறும்போது எதிர்நோக்கும் [illegible] கடமையாற்ற [illegible] என்றும் பயிற்சிபெற்று வெளியிடங்களுக்குச் செல்ல கஷ்டப்படும் ஆசிரியர்பற்றி அவர்கள் சிந்திக்கப் [illegible] என்றும், ஆசிரியர் சங்கங்கள் சுமுகமான இடமாற்றத்திட்டமொன்றினை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க இனியும் தாமதிக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கி. கார்த்திகேசு, பொ. சபாபதி, ஏ. துரைராசசிங்கம், ஜோ. லோசெப்பு ஆகியோரும் பேசினர்.

"வீட்டுக்குள் வந்து

'ஹலோ, ஹலோ' என்று கூப்பிட்டார்..."

கோர்ட்டில் இளம் பெண் சாட்சியம்

திருமலை, வெள்ளி. "நான் எனது வீட்டின் உள்ள அடுக்களையில் நெருப்பை பற்றவைத்துக்கொண்டிருந்தபோது எதிரியான சோமபாலா என்பவர் அடுக்களையிலிருந்த எனது ஆடையைப்பற்றி என்னை இழுத்தார். நான் உடனே கூச்சலிட்டேன்"

இவ்வாறு 19 வயது நிரம்பிய ஒர் கன்னிப்பெண் திருமலை மாஜிஸ்திரேட் திரு. எஸ்.பி. குணவர்த்தனா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார். கந்தளாய் ஸ்ரீலங்கா சீனி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சோமபாலா என்பவர் இக்கூட்டுத்தாபனத்தின் குவாட்டர்ஸில் வசித்த குறிப்பிட்ட இளம் பெண்ணுடன் தகாத முறையில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இளம்பெண் சாட்சியமளிக்கையில் "என்னுடைய சகோதரியும் வேறு வீட்டிலிருந்தவர்களும் இவ் வருடம் ஜனவரி மாதம் 27-ம் திகதி கோவிலுக்குச் சென்றிருந்தனர். அன்று காலை 10 மணியளவில் சமையலுக்காக மரக்கறி வெட்டிக்கொண்டிருந்தேன். அப்பொழுது யாரோ வந்து "ஹலோ!, ஹலோ" என்று கூப்பிட்டார்கள். அது எதிரி சோமபாலா என அறிந்தேன். அவர் அவ்வாறு என்னைக் குறிப்பிட்டு அழைத்ததை நான் விரும்பவில்லை; போய்விடும்படி கூறினேன். பின் நான் அடுக்களையினுள் சென்று அடுப்பைப்பற்ற வைத்தேன். அப்போது அவர் அடுக்களையினுள் வந்து எனது ஆடையைப்பிடித்து இழுத்தார். இவர் என்னுடன் தகாதமுறையில் நடக்க முயன்றபோது நான் கூச்சலிட்டேன். அங்கு நின்ற சிறுவர்கள் அடுக்களையினுள் ஓடி வந்து சத்தமிட்டார்கள். உடனே எதிரி ஓடிவிட்டார். அன்று பிற்பகல் 2 மணியளவில் எனது சகோதரி வீடு திரும்பியதும் நடந்ததை நான் கூறினேன். அடுத்தநாள் பொலிசாரிடம் இதுபற்றி முறையிட்டேன்" என்று கூறினார்.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

தீவுப்பகுதி

உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

அல்லைப்பிட்டி, வெள்ளி. தீவுப்பகுதி விளையாட்டுச் சங்க ஆதரவில் [illegible] வெற்றிக் கேடயத்திற்காகவும், [illegible] கேடயத்திற்காகவும், 'ஏ', 'பி' பிரிவினர்க்கான உதைபந்தாட்டப் போட்டிகள் காரைநகர் விளையாட்டுக்கழக மைதானத்திலும், புங்குடுதீவு விளையாட்டு மைதானத்திலும் நடைபெற்றன. இப்போட்டியில் காரைநகர் இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கும், [illegible] ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. [illegible] சனசமூகநிலைய விளையாட்டுக் கழகத்திற்கும், காரைநகர் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் காரைநகர் கழகம் வெற்றியீட்டியது. நயினாதீவு விளையாட்டுக் கழகமும் [illegible] விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் [illegible] வென்றது. புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும், புங்குடுதீவு [illegible] கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் நசரேத் சனசமூக நிலையம் வெற்றியீட்டியது. இப்போட்டிகளுக்கு தீவுப்பகுதி விளையாட்டுப் பேரவைத் தலைவர் பி. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

மல்லாகம் கிராமசபை

வரவுசெலவு திட்டம்

சுன்னாகம், வெள்ளி. மல்லாகம், அளவெட்டி ஆகிய கிராமங்களில் இரு சந்தைகள் அமைப்பதற்கு மல்லாகம் கிராமசபையின் வரவுசெலவு திட்டத்தில் கூடுதலான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் கிராமசபையின் 68 69-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கிராமசபைத் தலைவர் திரு. வி. ராமேசம்பிள்ளை தலைமையில் கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது.

உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் ரூ 82 628-60 சதம் வரவு என்றும், ரூ. 80, 719-57 சதம் செலவு என்றும் கணிக்கப்பட்டது.

இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி. யாழ்ப்பாணக் [illegible] திணைக்களத்தில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. ந. தெய்வேந்திரம் [illegible] இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 0 0

யாழ்ப்பாணம், சனி. [illegible] ஆசிரியர் பாடசாலை ஆசிரியை திருமதி செ. செல்வநாதன் சந்திரோதய வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் கதம்ப விழா

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி. சிறுவர் கதம்ப விழா நேற்று முன்தினம் [illegible] ஞாயிற்றுக்கிழமை ஊரெழு ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் பாடசாலை மாணவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செல்வி. த. மகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

தொழிற் சங்க பிரமுகர் பொலிஸாரால் கைது

கொழும்பு வெள்ளி

ரயில்வே என்ஜினியரிங் தொழிற்சங்க ஊழியர்களை வேலைநிறுத்தம் செய்யுமாறு தூண்டியதாகக் கூறப்படும் தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸ் நிலையத்திலிருந்து கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து மருதானை பொலிஸார் இந்தத் தொழிற்சங்கப் பிரமுகரைக் கைதுசெய்தார்கள்.

மன்னார், புத்தளம் பகுதியில் வாலாவி, முருங்கன், முண்டல், மதுரங்குளி ஆகிய இடங்களிலுள்ள ரயில்வே என்ஜினியரிங் தொழிற்சங்க ஊழியர்கள் பலரை வேலைநிறுத்தம் செய்யுமாறு இவர் தூண்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை ரயில்வே இன்ஜினியரிங் தொழிற்சங்கத்தின் முக்கியமான ஓர் உத்தியோகத்தர் இவர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோஷ்டி சண்டையால் மக்கள் பீதி

மயாணம் போவதற்கும் பாதுகாப்பு கோருகிறார்கள்

யாழ்ப்பாணம், சனி

இரு கோஷ்டியினரிடையே கோவில் திருவிழாவில் ஆரம்பமான சச்சரவு, மரணச் சடங்கு செல்லுமளவுக்கு முற்றியுள்ளதாம்.

இதுபற்றிய பல புகார்கள் வடபகுதி பொலிஸ் அதிகாரிகளுக்கும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நல்லூர், முத்திரைச் சந்தை, கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சமூகத்தினருள் இச்சச்சரவுக்கு [illegible] காரணம் எனவும் புகார்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்துக்குள் 3 தடவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சில வாலிபர்களது நடவடிக்கைகளால் செம்மணி மயானத்துக்கு சடலங்களைத் தகனம் செய்யக்கொண்டு செல்பவர்கள் தமக்கு உதவியாக பொலிஸாரின் உதவியைக் கோருமளவுக்கு இச்சச்சரவு வளர்ந்துள்ளதாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவில் திருவிழா வொன்றுடன் ஆரம்பமான இச் சச்சரவு பிரேத ஊர்வலத்தையே மறித்துச் சண்டித்தனம் காட்டும் நிலைக்கு மாறியுள்ளது. சுமார் 20 வாலிபர்களின் பெயர்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸார் இப்போது இப் பகுதிகளில் கூடுதல் கண்காணிப்புச் செலுத்தி வருகின்றனர்.

(கா. தி.)

தமிழக அரசின் ஐந்தாண்டு திட்டம்

இங்கிருந்து போகிறவர்களுக்காக

(சென்னை, டிச. 13)

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் பயணிகளுக்கென தமிழக அரசாங்கம் ரூபா 100 கோடி திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய, கைத்தொழில் துறையில் இவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலமைந்த திட்டமும் இடம்பெறவிருக்கிறது. புதிய வீடுகளும் கட்டிக் கொடுப்பதற்கு இத்திட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இலங்கையிலிருந்து திரும்புபவர்கள் ஓரளவு வசதியாக வாழ வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜி. ஸி. ஈ. பரீட்சை விரைவில் நடக்கும்

கொழும்பு வெள்ளி

இம்மாதம் 12-ம் திகதி நடக்கவிருந்த ஜி. ஸி. ஈ. (சாதாரண)ப் பரீட்சை ஜனவரி மாதத்தில் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரியவருகிறது.

ஜி. ஸி. ஈ. வினாத்தாள் கடைசி நேரத்தில் திருட்டுப் போனதைத் தொடர்ந்து நடக்கவிருந்த பரீட்சை ரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே.

முன்னர் வினாத்தாள்களைத் தயாரித்த கல்விப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எவ்வித வேதனமுமில்லாமல் ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கான புதிய வினாத்தாள்களைத் தயாரித்துக்கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனராம்.

பெண் குழந்தை

வாஷிங்டன், டிச. 12

சென்ற ஜூலை மாதத்தில் கொலை செய்யப்பட்ட செனட்டர் ரொபேர்ட் கென்னடியின் மனைவி திருமதி ஒத்தெல் நேற்று ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இது இவர்களது 11-வது குழந்தை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் கம்பனியாருக்காக யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாஜி மந்திரி சென்ற

ரயில் தடம் புரண்டது

கொழும்பு வெள்ளி

முன்னாள் அமைச்சர், செனட்டர் எம். திருச்செல்வம் பிரயாணம் செய்த புகையிரதம் தடம்புரண்டது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த இந்தப்புகையிரதம் மட்டக்களப்புக்கு அண்மையிலேயே தடம்புரண்டது. எவருக்கும் காயமடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

செனட்டர் திருச்செல்வம் இருந்த பெட்டியே தடம்புரண்டதாம். இதுபற்றிய புலன் விசாரணையை பொலிஸாரும், ரயில்வே பகுதியினரும் நடத்தி வருகின்றனர்.

கைதிகள் நலன்புரிச் சங்கம்

[illegible], வெள்ளி

கொழும்பில் நடக்கவிருக்கும் கைதிகள் நலன்புரிச் சங்க மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணக் கிளைச் சங்கத்தின் தலைவர் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் ஜனாப் முஹம்மது ஜமீல், உப தலைவர் திரு. சபி. இராசையா, காரியதரிசி திரு. கனகரத்தினம் ஆகியோர் உட்பட மூன்று பேரடங்கிய குழுவொன்று இம்மாதம் 16-ம் திகதி கொழும்பு செல்கிறது.

விடுதலையாகும் கைதிகளுக்கு அவர்களது நலன் பற்றியும் தொழில்வசதி அளிப்பது பற்றியும் இவர்கள் ஆராய்வார்கள்.

கராஜில் காணமல் போன பணம்

நல்லூர் வெள்ளி

கராஜ் ஒன்றில் களவு போன பணம் அதே கராஜில் வேலைபார்த்துவரும் ஒருவரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள கராஜ் ஒன்றில் ரூபா 350 களவுபோனது பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்தபோது களவுபோன பணம் அவரிடம் இருக்கக் காணப்பட்டது.

விசாரணை நடாத்திய சார்ஜன்ட் வைரமுத்து சந்தேக நபர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கல்வி சபையிலிருந்து

வில்மட் பெரேரா ராஜினாமா

கொழும்பு, வெள்ளி

தேசிய உயர் கல்விச்சபையின் ஆரம்பமுதல் அங்கத்தவராக இருந்து வந்த திரு. வில்மட் பெரேரா தனது அங்கத்துவத்தை ராஜினாமா செய்துள்ளார். கடந்த 9-ம் திகதி இவர் தனது ராஜினாமாக் கடிதத்தை கல்வி மந்திரியிடமும், அதன் பிரதியொன்றை சேர்மன் திரு. [illegible] [illegible] ராஜினாமாவுக்கான காரணத்தை [illegible] யில் தெரிவிக்க மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

அலிகான் கொலைவழக்கு

வழக்கறிஞர்களின் வாதம் முடிந்தது

தீர்ப்பு ஒத்திவைப்பு

திருகோணமலை வெள்ளி

திருகோணமலையில் உப்புவெளி என்னும் இடத்திலுள்ள ஜமால்தீன் வீட்டைச் சேர்ந்த இரண்டரை வயதுப் பாலகன் அலிகான் படுகொலை வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வழக்கில் இரண்டாவது எதிரியான [illegible] என்பவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு பி. [illegible] நடந்த கொலைக்கும் இரண்டாவது எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று வாதித்தார்.

கொலையுண்ட சிறுவனின் தந்தை சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு ஆர். சம்பந்தன் கொலை நிகழ்ந்த நேரத்திலோ இடத்திலோ இரண்டாவது எதிரி சமுகமளித்திருந்தார் என்று நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் எதுவும் இல்லாதிருந்தாலும் கொலை நிகழ்ந்த பின்னர் இரண்டாவது எதிரியின் செயல் முறையிலிருந்து அவருக்கும் கொலைக்கும் சம்பந்தம் நிச்சயம் உண்டு என்று வாதாடினார். மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பை இம்மாதம் 20ம் திகதி வழங்குவார்.

இந்து கலாசார

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தேன் எனினும் அவர்கள் [illegible] பல புதிய செய்திகள் எனக்குத் தெரியவந்தன. தமிழ்பட்ட ஒருவரின் எதிர்ப்பின் காரணமாக இந்துக்கலாசாரத்தில் மாணவர்க்குக் கற்பிக்கும் வாய்ப்பு இல்லை. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கவென முதன் முதலாகப் பல்கலைக்கழகத்துக்கு இந்துமாணவர் [illegible] அறிந்தேன். இந்நிலைமை நீடிப்பது மாற [illegible] வண்ணம் [illegible] உள்ள சைவசமயிகள் அனைவரும் பல்கலைக்கழக மாணவரும் ஆகியோரும் ஒத்துழைக்குமாறு நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.'

'நாவலர் தமிழ்த் தொண்டா சமயத் தொண்டா சிறந்தது' எனும் பட்டிமன்றம் ஒன்றும் அழகாக இடம்பெற்றது.

ஜவுளி வாங்க புதிய புள்ளிகள்

கொழும்பு, வெள்ளி

இம்மாத இறுதியுடன் 13வது அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தின் 110, 111, 112ம் இலக்கப் புள்ளிகளும், 14வது புத்தகத்தின் 113வது புள்ளியும் ஜவுளி வாங்குவதற்குச் செல்லுபடியாகாது. ஜனவரியிலிருந்து 14வது பங்கீட்டுப் புத்தகத்தின் 114, 115, 116ம் புள்ளிகள் ஜவுளி வாங்குவதற்குச் செல்லுபடியாகும். [illegible] கார்டுகளின் 17, 18, 19ம் புள்ளிகள் செல்லுபடியாகும்.

இலங்கை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தக் கூறியுள்ளார். கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு இடைஞ்சல் இல்லாதவாறு ஆதரவாக பொதுமக்கள் நடந்து கொள்ளவேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வித சூழ்நிலையிலும் பொலிஸார் ஆற்றிவரும் சிறந்த சேவைக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

பரீட்சை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி கல்வி அமைச்சைத் தொலைபேசியில் விசாரித்தபோது பரீட்சைப் பகுதியோ கல்வி இலாகாவோ தமக்கு எதுவும் தெரிவிக்கவில்லையெனப் பதில் கூறினார்கள்.

(கா. தி.)

கவீப் முதற் பரிசு

நேற்று வெளியான தேசிய லொத்தர் சபை கவிப் சீட்டிழுப்பில் முதலாவது பரிசு பெற்ற டிக்கட் 02 J 0755 என்று இருந்திருக்கவேண்டும். 02 G 0755 என்று வெளியானது தவறு.

கப்பல் தீப்பிடித்ததில் 14 பேர் மறைவு

அம்ஸ்டர்டாம், டிச. 13

அம்ஸ்டர்டாமுக்கு அருகிலுள்ள டெல்ப் என்னும் கப்பலொன்று தீப்பிடித்துக் கொண்டது. 14 பேரைக் காணவில்லையென்றும் பலர் பலத்த காயங்களுக்குள்ளானதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அம்ஸ்டர்டாம் பொலிஸார் தீயை அணைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். இறந்தோரைத் தேடிக் கண்டுபிடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மரண அறிவித்தல்

மானிப்பாயில் வசிக்கும் திரு. எஸ். நடராஜனும், திரு. எஸ். செல்லையா ஆகியோரின் தமையனாரும் புஷ்பம், லோகசம்மாவின் தந்தையும், திரு. பொன்னுத்துரையின் மாமனாருமாகிய, திரு. புவிராஜசிங்கம் காலமாகிவிட்டார். அவரது ஈமக்கிரியைகள் சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

திருமதி பொன்னுத்துரை. மானிப்பாய். 398

மரண அறிவித்தல்

நல்லூர் 128, கோவில் வீதி, கைலைநாதக் குருக்களின் அருமை மனைவியும் வரதராஜ சர்மா, இராமச்சந்திர ஐயர், சண்முக சுந்தரம், [illegible] அம்மா ஆகியோரின் தாயாருமாகிய செல்லம்மாள் அவர்கள் 13-12-68 வெள்ளிக்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் இன்று 14-12-68 நல்லைச் செம்மணி மயானத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். 185

தேவை

எமது 'ஈழநாடு' ஸ்தாபனத்தில் பத்திரிகை மடிப்பதற்கும், பத்திரிகை விநியோகம் செய்வதற்கும் ஆட்கள் தேவை. நேரில் வரவும். விநியோக மனேஜர், ஈழநாடு.